731

உ

சிவமயம்.

தேவகோட்டை

திருவாளர் அரு. அரு. சோம.

சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்

பிரிவாற்றுமையைக்குறித்து

பல வித்துவான்களியற்றிய

# இரங்கற்பாக்கள்.

இவை

திருவாரூர்

சு. சாமிஐயா தேசிகரால்

தேவகோட்டை

வைசியமித்திரன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1924.

O-,1X
N24
(8)288

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மஹைஸ்வரிய மஹௌதாரிய மகாப் பிரபுவும்,
சைவசித்தாந்த சமய பரிபாலன
சிவபத்த சிரோமணியு மாகிய,
ஸ்ரீமாந் அரு. அரு. சோம.

# சோமசுந்த்ரச்செட்டியாரவர்கள்

நெல்லையப்பர் எல்லையில்
திருவடியை எய்தினமை குறித்த பல்வகை

# இரங்கற்பா முதலியன.

### வெண்பா.

சீர்பூத்த தேவைநகர்ச் சீரியர்க்குட் சீரியனும்
பேர்பூத்த மாவணிகன் பிஞ்ஞகனுக்-கோர்பூத்த
ஆலயங்க ளெங்கங்கே யாய்ந்தாய்ந்து யாணுறத்
தாலமெங்குஞ் செய்தனன்முன் றான். 1

தேவாரம் பண்முறையிற் றேர்ந்தோதுஞ் செவ்வியர்க்கு
நாவார நன்றுசொலி நல்லபொருள்-மாவார
வேண்டுமள வீந்தீந்து மேலு மவர்பயிலத்
தூண்டினனித் தூயவன்மா தோ. 2

கற்றவர்க ளெல்லோருங் காதலித்து மேன்மேலும்
சுற்றமெனச் சூழ்ந்திருந்து தோத்திரிக்கப்-பெற்றவன்காண்
எந்நாளும் வேண்டு மிருநிதிய மீந்தவன்கல்
கன்றவென் றேநிடவே கண்டு. 3

சத்திரங்க ளெங்கெங்குந் தாபித்தாங் கெவ்வெவர்க்கும்
சித்திரான் னங்கணிதந் தித்திப்பாய்-உய்த்துவந்தான்
சைவத்தை நாட்டுதற்குத் தக்கநெறி முற்றுஞ்செய்
தெய்வத்தைப் போல்வான் செகத்து. 4

சிவனடியிற் சிந்தை தினமுஞ் செறித்தோர்
அவனடிய ரன்னவனென் றுய்ந்து-கவனமுறப்
பேணி நிதமும் பெருமைமிகப் பாராட்டிப்
பாணிபொரு ளீந்தான் பணிந்து. 5

கூனர் குருடர் குழந்தைப் பருவத்தர்
மானர் வறிஞர் வலியற்றார்-ஊனர்
விருத்தர் மெலியர் விழைவனநன் கீந்து
திருத்தமுறச் செய்தான் றெரிந்து. 6

பூந்தோட்டம் வைப்பித்தான் பூரதற்காப் புண்ணியமா
மாந்தோட்டம் வைப்பித்தான் மாட்சிமிகத்-தேந்தோட்டு
மாமலர்க ளான்மாலை மன்ற வியற்றிடவே
ஆமனிதர் தம்மைவைத்தா னாய்ந்து. 7

காசிச் சிவன்கோயிற் காமருறு கோபுரத்தைக்
கோலிச் செயவந்தக் கூட்டாளி-பாலினுறு
கோளாளர் கோட்கேளான் கூட்டாளி யுண்மகிழ
வேளாண்மை செய்தவன்காண் மிக்கு. 8

சிவபுரா ணம்படிக்குஞ் சீர்த்தசபை தன்னில்
அவமுறவே மாறாக வங்கிருந்த-துவிசரிரு
வோர்களையு மாறின்றி யுற்றிடச்செய் சீரகத்தார்
தார்களையுற் றோங்குபுயத் தான். 9

சைவந் தழைக்கத் தகுந்தபெரும் வாயிலென
உய்வைக் கருதி யுயர்தேவைச்-சைவக்
கழகமொன்று தாபித்த கண்ணியவான் கற்றார்
பழகியொன்று புண்ணியவான் பார். 10

பசுமடங்கள் கட்[illegible]பி டேகம்
பசுபதிக்குச் செய்வித்தான் ப[illegible] வசுமதியில்

கூடலையாற் றூராரனைக் கோட்டினகர் கட்டிவைத்தான்
பாடலையா மற்பின்னும் பார்த்து. 11

கழிப்பாலை மேயவரன் கண்ணுதரு னீரில்
அழிப்பாலை மேவாம லன்று-செழிப்பாச்
சிவபுரியிற் கொண்டுவந்து சீர்த்ததளி செய்து
சிவபுரியிற் செல்லவைத்தான் றேர். 12

காரைநகர் மேவியன்று கண்ணுதலை யெள்ளினனை
வாரமுடன் பார்த்து மகிழற்க-வீரமுளாய்
என்றெழுதி யுய்த்திட்ட வென்னிருபம் பார்த்தன்றே
நன்றதனைச் செய்தா னயந்து. 13

தோன்றமுத்தி தோன்றுவிக்குந் தூயதிரு வாரூரில்
ஏன்றகம லாலயத்தை யேற்றமுற-நான்றவாய்க்
கண்ணுதலைச் சிந்தித்துக் கட்டித் தியாகனருள்
பண்ணுதலைப் பெற்றான் பணிந்து. 14

ஒன்றுதரு வேனென் றுவந்துபத்துக் கொள்கவென
நன்றுதரு வாரிவன்போ னண்ணுவரோ-சென்றடைந்தால்
இல்லா தவர்தாமு மீகையின ராவரன்றிச்
சொல்லா ரிலையென்னச் சூழ்ந்து. 15

இன்னவன்செய் புண்ணியங்க ளெல்லா மியம்புதற்கு
வன்மையெமக் கில்லையில்லை மாநிலத்தீர்-பன்னகமும்
பன்னுவாற் சொல்லிப் பலியாமை கண்டுவெள்கி
அந்நாளே துன்னிற் றரம். 16

பற்றுடனிப் புண்ணியங்கள் பண்ணினவன் யாரென்னில்
கற்றவர்சொற் கண்ணிமகிழ் கண்ணியனைச்-சொற்றிடுவாம்
சத்திரத்துச் செட்டியெனுந் தக்கவரு ணாசலனென்
றித்தலத்துச் சொற்பொலிந்தோ னே. 17

தெரிசிக்க முத்திதருந் தில்லைநகர் மேவி
உரிசிக்க நிர்த்தனஞ்செய் தோங்கி-விரிசிவன்றன்
பாதமலர் சேர்க்கப் பரசிவா வென்றுசொலிச்
சாதலிலன் சேர்ந்தான் சரண். 18

18/288

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தந்தைதன் செய்கை மைந்தன் செய்வது தக்க தென்னும்
இந்தமூ துரையின் வாய்மை யாவரு மினிது காணச்
சந்ததந் தருமஞ் செய்பத் தகுதியி னவன்பாற் சோம
சுந்தர னடியிற் பத்தி சோர்விலாச் சுதன்வந் துற்றான். 19

வந்தவ தரித்த ஞான்றே மாபெருங் கணிக ளீண்டி
இந்நற் புதல்வ னாலே யெழிறரு சைவ மோங்கிச்
சிந்தைமிக் குவப்ப மல்குந் தெரிதிர்நீர் பின்ன ரென்று
சுந்தர மாகச் சொற்றுச் சொன்னமும் பெற்றுச் சென்றார். 20

மதிதொறுஞ் செய்ய வேண்டு மகிழ்பெருங் கடன்மை யாற்ற
நதிதருஞ் சடைபாற் கன்ப னவினா னமச்சி வாய
விதிமுறை விளையாட் டாடும் வேலையும் விளம்ப லுற்றான்
விதிமுறை யிதுவா மென்று மேலவர் வியந்து சொற்றார். 21

காமனுஞ் சாமன் றானுங் காணுமுன் பெண்மை வேட்கும்
பூமனுங் காமர் கண்டு போதமார் பெரியர் போந்து
தேமலுங் கொன்றை வேந்தன் திருப்பெயர் தம்முட் செவ்விக்
காமெனுஞ் சோம சுந்தர னாமெனு நாம மிட்டார். 22

ஐந்தெனு மாண்டு செல்ல வறிவுறு தந்தை தானும்
சந்தமார் குரவற் கூஉய்த் தகுமுறை தனயற் கைய
அந்தமில் கல்விச் செல்வ மளித்தருள் செய்க வென்ன
வந்தமா குரவன் றானு மறுவிலா முகூர்த்தம் பார்த்து. 23

அந்தநன் முகூர்த்தந் தன்னி லருங்கல்வி பயிற்றச் சோம
சுந்தரன் கற்பான் சொற்ற குரவனும் வியக்கச் சொற்றான்
எந்தையே கல்வி யேற விடைவிடா தீக வென்ன
அந்தமில் குரவன் றானு மாசையோ டங்ங னீந்தான். 24

பிறந்திடு தலத்திலுள்ள பெரியவர் மாட்டும் பேணிச்
சிறந்திடு கல்வி கற்றுச் செல்லுநாட் சிந்தை செய்தே
அறைந்திடு மைந்தின் மேலோன் றாகிய வான னத்து
நிறைந்திடு நாவ லன்ற னிகரிலாக் கழகந் தன்னில். 25

கற்றிட வேண்டு மென்னுங் காதலாற் றந்தை தன்பாற்
கற்றிட வேண்டு மந்தக் கல்லூரி தன்னி லென்னக்
கற்றிட வேண்டு மாகிற் கல்வியாழ்ப் பாண நண்ணிக்
கற்றிட வேண்டு மென்று காதலி னனுப்பி னானே. 26

சுந்தரத் தோன்ற லானுஞ் சொற்றது பலித்த தென்னு
வந்துதன் கூல வீட்டில் வைகினன் னாவல் லோனின்
புந்தியார் கழக மேவிப் புரிவுடன் கற்று வந்தான்
சிந்தியா நாவல் லோனுந் திருத்தகு சுந்த ரற்கு. 27

தன்னுறு பற்று மிக்க தண்ணளிச் செந்தி னாத
னென்னுநல் லந்த ணாள னேற்றநற் குரவ னென்றே
தன்னுளங் கொண்டு சார்ந்த தவலருங் குணத்தி னாற்குப்
பன்னுக நூல்க ளெல்லாம் பரமன்சீர் பரப்ப வென்றான். 28

செந்திநா தைய னென்றிச் செகமெலாஞ் சீர்த்தி மிக்க
அந்தினன் மறைவல் லோனு மரன்புகழ் பரப்ப வெஃகிச்
செந்தமிழ் நூல்கள் பல்ல தெரித்தனன் செப்ப மாக
மைந்தனுஞ் சுந்த ரப்பேர் வள்ளலு மதித்துக் கற்றான். 29

கற்றலுஞ் சைவத் துண்மை கண்டனன் கடவுண் மேன்மை
சொற்றிடு புராணந் தம்முட் டொண்டர்தம் புராணந் தானே
தெற்றெனச் சிவன்றன் சீர்த்தி தெரித்திடுந் தொண்டர் முன்னு
உற்றிடு துணையு மீதென் றுறுதியா வுளத்திற் கொண்டான். 30

ஈங்கிவை கருதிக் கற்கு மேல்வையின் மணத்தை யெண்ணி
ஆங்குறு தந்தை தாய ரரும்பெரு மழகன் றன்னைப்
பாங்குற வழைத்து மேலாம் பண்புறு கன்னி தேடித்
தீங்கற மணஞ்செய் வித்துத் தெருட்டினர் வணிகச் செய்கை. 31

தந்தொழில் பயிற்று முன்னே தனயனுஞ் சதுர்ப்பா டாக
முந்தைய ரறியா மேன்மை முற்றிய தொழில்கண் முற்றும்
சிந்தையிற் றெரிந்து தேர்ந்து செகத்தவர் சீர்த்தி செப்ப
அந்தநாண் முதல தாக வணிபெற வாற்றி னானே. 32

செய்திறந் தெரிந்த தந்தை திருமகன் றிறமை தேர்ந்து
செய்துறுந் தொழில்க ளெல்லாஞ் சேரநீ செய்தி யானும்

னைதிற னின்றி நாளு நலனுறு நடேச னாரை
எய்தியங் கிருந்து கூத்த னிணையடி யேய்வ லென்றான். 33

சோமசுந் தரனும் வள்ள றாயதன் றந்தை சொல்லை
வாமமந் திரமாக் கொண்டே மற்றதற் கியைபத் தாதை
ஏமமன் னெமிக் கிப்பிள்ளை யென்றுளத் தெண்ணி யெண்ணிக்
காமமன் னுருவங் காய்ந்த கண்ணுத றில்லை கண்டான். 34

ஈங்கிது நிற்கச் சோம சுந்தர னியற்றுஞ் செய்கை
ஆங்கது தெரிந்த வண்ண மறைகுது மாய்ந்து சில்ல
பாங்குறு தந்தை நீக்கம் பதைப்புறு பரிவு செய்பத்
தாங்குத றரிக்க மாட்டா னிடையிடை தில்லை சாரும். 35

தன்னது குடும்ப வேலை தான்றனி நடாத்து மேல்வை
முன்னது பெரிய காதை முறையினிற் கயிறு சாத்திப்
பின்னது நன்னூ ராகிற் பிடித்தது செய்வன் செய்யான்
அன்னது முரனு மாயி னவன்றவஞ் செப்பற் பாற்றோ. 36

செய்தனன் சிவன்பா லன்பாய்த் திகழ்தரு சபரி யென்றும்
உய்தரத் தொண்டர் காதை யோதிநன் குற்றான் பத்தி
மெய்தரு தமிழ்வே தத்தை விதிப்படி விரும்பி யோதி
எய்தருங் கருணை பெற்றிங் கின்பமார்ந் திருந்தா னம்மா. 37

சிவதரு மங்கள் செய்யத் திரவியம் வேட்டோர்க் கீந்தான்
சிவதரு மங்கள் செய்யத் திரவியஞ் செல்வர்க் கீந்தான்
சிவதரு மங்கள் செய்யத் திரவிய நட்டோர்க் கீந்தான்
சிவதரு மங்கள் செய்யத் திரவியம் புலவர்க் கீந்தான். 38

வடமொழி நீல கண்ட மாபெரும் பாடி யத்தைத்
திடமுறத் தமிழிற் செய்யச் செந்திநா தைய னென்னும்
வடமொழி மாண்புஞ் செய்ய வண்டமிழ் மாண்புந் தேர்ந்துள்
அடலுறு புலவற் கீந்தா னாயிரம் ரூபா வம்மா. 39

செம்பொருட் டமிழுந் தெய்வ பாஷையுந் தெரிந்து கொண்ட
அம்பல வாண சாமி யாகிய நாவ லோனுக்
கம்பலந் தன்னில் ரூபா வாயிரத் திரட்டி யீந்தான்
அம்பல மாகத் தொண்டர் புராணத்திற் கருத்தங் காண. 40

பத்தியின் மிக்குச் சைவ பாலனம் பண்ண வெஃகி
யுத்தியில் பரம தத்த ருளுற்றிடு கண்ட னத்தைப்
புத்தியிற் பரிக ரித்துப் புறமத கண்ட னங்கள்
சுத்தியிற் செய்து வென்று துலங்குறு பாம்பன் சாமி. 41

சுவசம யத்திற் காகத் தொடுத்திடு வழக்கிற் காங்கே
தவசர மென்னச் சார்ங்க பாணியைத் தரித்தோற் கன்ப
அவசர மனுப்பவேண்டு மவாவுறு மளவு ரூபா
பவசார் பாவிற் சொல்லேன் பரசிவ னருளீ தென்றே. 42

வரைதரு நிருப மொன்று மற்றியா னுய்ப்ப நோக்கிக்
கரைதரு மனத்த னாய கட்டழ கவனும் ரூபா
உரைதரு சதம னுப்பி யுவப்பினை யுறுத்தான் சாமி
பரைதரு மிடத்த னன்பன் பத்தியை வியந்தான் பாரில். 43

உற்சவ மமைப்போர்க் கீந்தா னுறுமிடி யவர்க்கு மீந்தான்
சற்சனர் தமக்கு மீந்தான் றாளிலார் தமக்கு மீந்தான் [தான்
பொற்சபைப் புனிதர்க் கீந்தான் போதுநான் மறையோர்க் கீந்
சொற்சுவை யறிந்தோர்க் கீந்தான் றுயரறக் குருடர்க் கீந்தான் 44

ஆலயம் புதுக்கு வித்தா னாலயம் புதுக்கச் செய்தான்
ஆலயம் பெருக்கு வித்தா னாலய மெழுகு வித்தான்
ஆலயம் பலவுஞ் சென்றா னாலய மானைக் கண்டான்
ஆலயந் தொழுதல் செய்தா னாலய மமர்ந்தா னன்றே. 45

மூர்த்தியை விரும்பிச் சென்றான் மூர்த்தியை முன்னர்க் கண்டான்
மூர்த்தியை முன்னி னின்றான் மூர்த்தியை முடியிற் சேர்த்தான்
மூர்த்தியைப் பதிட்டை செய்தான் மூர்த்தியை முழுவல் செய் [தான்
மூர்த்தியை யடியில் வீழ்ந்தான் மூர்த்தியை மொழித லுற்றான். 46

தீர்த்தத்தைத் தேடிச் சென்றான் தீர்த்தத்தைச் சிரசிற் கொண் [டான்
தீர்த்தத்தை யாடிக் கொண்டான் தீர்த்தத்தைச் சிறப்பைத் தேர்ந் [தான்
தீர்த்தத்தைப் பாணி கொண்டான் தீர்த்தத்தைப் பருகித் தீர்ந் [தான்
தீர்த்தத்தைச் சேர்ந்து நின்றான் தீர்த்தத்தைத் தேடி னானே. 47

காவினை வைத்தான் காவிற் கடிமலர் கடவுட் கீந்தான்
சாவினை மீண்டும் மீண்டுந் தவிர்தலைத் தன்கண் வைத்தான்
பாவினைப் படித்துக் கொண்டான் பணத்தினைப் பருக்கச்செய்தான்
ஆவினை யளித்தல் செய்தா னருளினை யடைதல் செய்தான். 48

சிவாகமக் கோயில் செய்தான் சிவாகமந் தேடச் செய்தான்
சிவாகமம் படிக்கச் செய்தான் சிவாகமந் தெளியச் செய்தான்
சிவாகம மச்சிற் செய்தான் சிவாகமந் தெரியச் செய்தான்
சிவாகம தனத்தைச் செய்தான் சிவாகம நிலைக்கச் செய்தான் 49

கண்டிகை சிரத்திற் கொண்டான் கண்டிகை களத்திற் கொண் [டான்
கண்டிகை யுரத்திற் கொண்டான் கண்டிகை கரத்திற் கொண் [டான்
கண்டிகை வரத்திற் கொண்டான் கண்டிகை கவினிற் கொண்டான்
கண்டிகை பரத்திற் கொண்டான் கண்டிகை கருத்திற் கொண் [டான் 50

நீற்றினைப் பவத்தை நீற்று நெருப்பென நினைந்து வேட்டான்
நீற்றினைச் செவ்வ நல்கு நிதியென நினைந்து வேட்டான்
நீற்றினை நிரய நீக்கு மாற்றென நினைந்து வேட்டான்
நீற்றினைப் பிணியை நீக்கு மருவென நினைந்து வேட்டான். 51

அஞ்சுறுங் கூற்ற மென்ன வஞ்செழுத் தறைந்தா னென்றும்
அஞ்சுறு மிடர்க ளென்ன யஞ்செழுத் தறைந்தா னென்றும்
அஞ்சுறும் வினைக ளென்ன யஞ்செழுத் தறைந்தா னென்றும்
அஞ்சுறு மிரும லென்ன யஞ்செழுத் தறைந்தா னென்றும். 52

சைவமே விருத்தி யாகத் தகுதரு மங்கள் சால
உய்வதே கருதி யென்று மொழிவிலா வுறுதி யாகச்
செய்வதே நியமம் பூண்டான் றேவரு மதிச யித்தார்
நைவதே யினிநாஞ் சைவ நாட்டுநர் நாட்டி ழுடி. 53

## வினுவிடைச் சூத்திரம்.

அறஞ்செய விரும்பென வௌவைநன் கறைந்தருள்
திறந்தெரிந் தறத்தினைச் செய்தவ ரியாரே
திறந்தெரிந் தறத்தினைச் செய்தவன் சிவன்பேர்
திறந்தெரிந் தறைந்து திகழ்தரு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 54

ஆறு வதுசின மாமெனும் வாக்கியம்
தேறிச் சினந்தவிர் செய்கைய ரியாரே
தேறிச் சினந்தவிர் செய்கையன் சிவன்பேர்
தேறித் தெளிந்து செப்பிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனும் தூயமா வணிகனே. 55

இயல்வது கரவே லென்ப துணர்ந்தும்
இயல்வது கரவா தீந்தன ரியாரே
இயல்வது கரவா தீந்தவன் சிவன்பேர்
இயல்புறத் தினமு மியம்பிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 56

ஈவது விலக்கே லெனுமுப தேசம்
தாவற வுணர்ந்தது தவிர்ந்தவ ரியாரே
தாவற வுணர்ந்தது தவிர்ந்தவன் சிவன்பேர்
தாவற வுணர்ந்தது சாற்றிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 57

உடையது விளம்பே லென்றிடு முரையினைத்
தடையற வுணர்ந்தது தவிர்ந்தவ ரியாரே
தடையற வுணர்ந்தது தவிர்ந்தவன் சிவன்பேர்
தடையற வுணர்ந்தது தானுரை நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 58

ஊக்க மதுகை விடேலெனு முண்மையைப்
போக்கற வுணர்ந்தது புரிந்தவ ரியாரே
போக்கற வுணர்ந்தது புரிந்தவன் சிவன்பேர்
போக்கற வுணர்ந்தது புகலுறு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 59

எண்ணெழுத் திகழேலெனுமரு மருந்தினைக்
கண்ணெனக் கருதிக் கற்றவ ரியாரே
கண்ணெனக் கருதிக் கற்றவன் சிவன்பேர்
கண்ணெனக் கருதிக் கழறிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 60

ஏற்ப திகழ்ச்சி யெனுமமு தூரையினை
ஏற்புற வெண்ணி யேற்றில ரியாரே
ஏற்புற வெண்ணி யேற்றிலன் சிவன்பேர்
ஏற்புற வெண்ணி யிசைத்திடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 61

ஐயமிட் டுண்ணெனு மருளார் மொழிப்படி
உய்வினை யுன்னியஃ தூருற்றின ரியாரே
உய்வினை யுன்னியஃ தூருற்றினன் சிவன்பேர்
உய்வினை யுன்னியஃ யோதுறு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 62

ஒப்புர வொழுகெனு மொப்பில் வாசகம்
இப்புவி யோர்ந்தஃ தியற்றின ரியாரே
இப்புவி யோர்ந்தஃ தியற்றினன் சிவன்பேர்
இப்புவி யோர்ந்தஃ தியம்பிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 63

ஓதுவ தொழியே லெனுமுயர் வாக்கினை
மேவர வுணர்ந்து விளம்பின ரியாரே
மேவர வுணர்ந்து விளம்பினன் சிவன்பேர்
மேவர வுணர்ந்து விளபிடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 64

ஔவியம் பேசே லெனுமஃ தறிந்தும்
ஔவியம் பேசா தமர்ந்தன ரியாரே
ஔவியம் பேசா தமர்ந்தவன் சிவன்பேர்
அவ்வியம் பேசா தறைந்திடு நாவன்
வாமசுந் தரனருள் வழங்கிடப் பெற்றுவாழ்
சோமசுந் தரனெனுந் தூயமா வணிகனே. 65

---

## அறு சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

எண்ணிலாப் புண்ணி யங்க ளெம்மிறை சிவனை நோக்கிப்
பண்ணலாற் பத்தி மிக்குப் பாரினி லடங்கா வண்ணம்
நண்ணலாற் சைவ நாட்டு நரபதி நானி லத்தென்
றெண்ணியே யிச்சை கூர யாவரு மிங்கு வாழ்ந்தான். 66

வாழ்ந்தவன் றனக்கு முத்தி வாய்ந்தநாள் வந்த தன்மை
சூழ்ந்தறிந் தனனே வன்றிச் சோமசுந் தரன்றான் செய்த
பாழ்ந்திடு பிறவிப் பௌவம் பாற்றிடு கருணை தானே
தாழ்ந்துநன் முத்தி பெற்ற சம்பந்தர் பதிகந் தன்னின். 67

## வேறு.

பெருஞ்சாந்தி காணாதே போதியோ பேதையும் பாவா யென்று
தருஞ்சாந்தி மிகவுமச் சம்பந்தர் சாற்றுதிருப் பதிக மோர்ந்தோ
இருஞ்சாந்தி கண்டிறைவ னிணையடிக ளெய்தியின்ப மென்று
[மெய்தப்
பெருஞ்சாந்தி மதுரைநகர் பிள்ளைகளோ டொருங்கெய்திப் பின்
[னர்ச் சாந்தி. 68

கண்டுபெரும் பேறுபெற்றுக் கதிர்வடிவேற் குமரனுக்குங் காணுஞ்
[சாந்தி
கண்டுபெரும் பேறுபெறச் செந்தூர்க்குக் காதலுளங் கனிந்து
[சென்று
கண்டுபெருஞ் சாந்தியினைக் கந்தனவன் பேரருளுங் கையில்
[வாங்கிக்
கண்டுபெரு மகிழ்ச்சியுடன் கதியுதவு நெல்வேலி கண்டுற்
[றானல் 69

வேறு.

தந்தைதன் பெயரை மூத்த தனயற்குச் சார வைத்தான்
இந்தநற் றரும மெல்லா மியற்றிவாழ் நீயு மென்ற
இந்தமா தலத்தி னென்று மினையவ ரோடு மென்று
சந்தமார் தரும மென்னுந் தார்முடி சூட்டி னானே. 70

வேறு.

சூட்டிருதி ரோற்காரி வற்சரத்தி லாடிமதி சொல்லுந் தேதி
நாட்டுபதி னாறுதனிற் சேய்வாரஞ் சதுர்த்திதிதி நல்லம் பக்கம்
கோட்டமில் பூரட்டாதி நாளதனிற் குலவுநெல்லை யப்ப னேக்கங்
காட்டவவ னடியிணைகள் கண்டத்து வித்மாகக் கலந்தான்
[மாதோ. 71

---

சிந்தியல் வெண்பா.

நாமனந்த நன்மைபெற நம்மவரே சிந்தைசெய்மின்
காமனந்த முன்புவிழி கண்ணுதலைக் கண்ணிமகிழ்
சோமசுந்த ரன்புகழே சொற்று. 72

---

கட்டளைக் கலித்துறை.

பணத்தினைத் தேடினர் பாரினைத் தேடினர் பண்புமிகும்
குணத்தினைத் தேடினர் கூலமுந் தேடினர் கொள்கைமிகு
மணத்தினைத் தேடினர் மற்றுள தேடினர் வண்டருமம்
கணத்திலுந் தேடிலர் சுந்தரன் போலிவர் கண்ட தென்னே. 73

மனைவினை யோர்ந்தனள் வாய்விட் டலறிட மைந்தருநின்
நினைவினை நீங்கலர் நீவிட் டகன்றமை நெஞ்சிலுன்னி
இனைவினை யெய்ந்தன ரேமுறச் சுற்றமு மெண்ணி யெண்ணி
மனைவினை மாய்ந்தனர் மாழ்க மறைந்திடன் மன்னருளே. 74

சேக்கிழார் நாமந் தினந்தொறு முன்னிச் செபித்திடுமுன்
வாக்கினைக் கேட்டு மகிழ்வுற வின்னும் வருகுவை யோ
பாக்கியந் தேச்கு பவரினுட் பாரிற் பயன்படைத்த
பாக்கிய வாக்குப் பழுதறு பாக்குப் பகர்பவனே. 75

---

## அறு சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சிவனது சமயந் தன்னைச் சீர்பெற வளர்த்த ஞானே
தவனது வாகு மென்று தனம்பொருள் சரீர மாவி
பவனது பாறும் வண்ணம் பரனுக்குப் பரிவி னீந்த
இவனது தருமஞ்செய்ய வினியெவர் வருவா ரந்தோ. 76

தந்தைமா தருமங் கண்டு சாரரு ளுசல ன்றுன்
இந்தமா நிலத்திற் சைவ மினிவளர்த் திடுவ னென்றே
சிந்தைமா மைய னீங்கிச் சிவசம யத்தா ரெல்லாம்
புந்திமா மகிழ்ச்சி கூர்ந்தப் புதல்வனைப் போற்றி வாழ்மின். 77

## வேறு.

தனயனரு ளுசலனுந் தந்தைபுரி தருமெலாந் தானு மோம்பித்
தனதனிவ னெனனயாருந் தனமுமிகத் தருமமிகத் தானு மோங்
[கித்
தினமுமன முறச்சிவனைச் சிந்தித்துத் திருவருளைச் சேரவாங்கி
மனமகிழ வளர்பொருளை வறியவர்க்கு மற்றெவர்க்கு மீந்து
[வாழி. 78

## வேறு.

இச்செயல் புரியு நீரா லிவன்மனை மைந்த ரெல்லாம்
பொச்சமி லாயுள் செல்வ மாதிய பொருந்தி வாழி
கச்சினை யரவ தாகக் கட்டிய கடவுள் செய்யும்
அச்சமி லருளும் வாழி யவனுற வினரும் வாழி. 79

தந்தையின் றந்தை தானுந் தந்தையுந் தாமொ ருங்கே
சந்தமார் வடிவு கொண்டார் தமதரு ணாச லன்போல்
இந்தமா நிலத்தி னென்ன யாவரு மேத்தெ டுப்பப்
புந்தியார் புதல்வ நீயும் பொருடனைப் போற்றி வாழி. 80

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

---

## சரமகவி.

### பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நாட்டிற்புக ழுறும்பாண்டி நாட்டிலுயர்
  படைத்திலகு நாட்டுக் கோட்டை
நகரமென வுலகுபுகழ் நகரமொரு
  நான்கையொழி நகரம் நூறு
காட்டியுறு மதிலுயர்வு காட்டியுள
  நகராலங் காட்டி நின்ற
கண்டனே ருறவதியுங் கண்டதே
  விக்கருகிற் கண்ட தேவி
கோட்டை யெனப் பெயர்கொணிதிக்
  கோட்டைபெறு நகர்தருமக் கோட்டை யாகக்
குலவுநக ரதில்வசியர் குலமதின்மே
  லுவகையார் குலத்தின் மேன்மை
சூட்டியசூ டாமணியைச் சூட்டிலுப்பைக்
  குடிக்கோயிற் சூட்டுஞ் சோம
சுந்தரனே யவ்வுலகு சுதந்தரங்கொண்
  டிவ்வுலகைத் துறந்தா யென்னே.

பாரூரு நால்வர்திருப் பாவூரும்
  பதிகளெலாம் பரவி யாங்கு
பணிகொண்ட பரனிருதாள்
  பணிகொண்டு மவன்கோயிற் பணியுங்கொண்டு

சீருரு மவன்பாடற் செவியூரத்
        தினங்கொண்டத் தேவற் போற்றிச்
சிவசிவவென் றிடைவிடா தவன்பெயரை
        எப்பொழுதுந் தியானங் கொண்டு
மாருரும் பணிசெயுமன் பாலூரும்
        பணிபுரிய வாரம் பஞ்செய்
தணிபெற நடாத்துமதற் கணியெதெனத்
        யாகேசர்க் கன்ப னுகுங்
காருரு மிந்திரனைக் கலந்துறுவோ
        மென்றெண்ணித் காய மேறிக்
கண்டனையோ விந்திரனைக் காண்சோம
        சுந்தரப்பேர் காணுங் கோவே.

பூவுலகிற் கிர்வாணப் புலவர்தமக் களிப்பதிலோ
        போசன் போன்றாய்
புத்தியுறு முத்தமிழ்சேர் புலவர்க்கீ
        வதிற்குமணன் போல நின்றாய்
பாவுலகிற் பரவிசைகொள் பண்ணவருக்
        களிப்பதிலோ பாண்டி யன்சீர்
பத்திமிகுஞ் சுத்தர்மனப் பரிவறச்செய்
        வதிலுமியற் பகைநே ருற்றாய்
யாவுலகுந் திரியுமற்ற யாசகர்க்கீ
        வதிற்காதி யாக நின்றாய்
யாருமுரை யிவ்வுலக யாசகமெ லாம்புரிந்தோம்
        யாமக் கற்பக்
காவுலகுஞ் சென்றீகை காணவியற் றிடுவமெனக்
        கருதி வானைக்
கண்டனையோ கற்பகத்தைக் கண்டனையோ
        மதியழகா கரந்தா யென்னே.

பிறந்தனைமற் றிவ்வுலகிற் பிறங்குசத்தி ரத்தரெனப்
பேர்வி ளங்கப்
பெற்றவரு ளுசலத்தைப் பிதாவெனவும்
பெற்றனை நற்பிரபு வாக
வறந்தனையும் பற்பலவா யாற்றினையிவ் வுடற்சுத்த
மார வெண்ணி
யறுபதுறுஞ் சாந்தியுயை மம்பலத்தி லியற்றினையவ்
வரனுங் காணச்
சிறந்தனையம் பலம்போன்ற சீருடைத்த சபையைந்தும்
தெரிசித் தேத்தித்
திகழ்ந்தனையச் சபையைந்திற் றிருவளரு
நெல்வேலி சேர்ந்துன் னுவி
துறந்தனைதாம் பிரபரணித் தூநீரிலு டலைமிகச்
சுத்தஞ் செய்து
சோமசுந்தரப் பெயரோய் சொந்தநட ராசனடித்
துணைகொண் டாயோ.

பாரிருக்கப் பலமிருக்கப் பணமிருக்கப் பதியிருக்கப்
பாரி கொண்ட
பண்பிருக்கப் புத்திரசம் பத்திருக்கப் பரிவிருக்க
பந்து வர்க்கத்
தாரிருக்கத் தனமிருக்கத் தகைவிருக்கத் தங்கிருக்கத்
தக்க மாடி
தரித்திருக்கும் வீடிருக்கத் தலமிருக்கப்
பரமசிவன் றளைப் போற்றிச்
சீரிருக்க நீபடித்த தேவார முதற்றமிழின்
சிறப்பி ருக்கச்
செந்தமிழ்வல்லோர் திகைக்கச் செத்தனையென்
றுலகமழச் சிறக்கவுன்றன்
பேரிருக்க வைத்துடலைப் பிரிந்தனைருத்
ரோற்காரி பெற்றுவாடி
பேசும்பதினைறுபிறை பின்னூறுநாள் சதுர்த்தியினிற்
பிறங்க மாதோ.

வேறு.

அந்த ரம்புகுந் தன்பது றுஞ்சோம
சுந்த ரப்பெயர் தோன்றிய வள்ளலே
சந்த மாரவுன் றன்குலம் நாளுமே
சிந்தை கொண்டு சிவனடி வாழ்வையே.

இங்ஙனம்,
**இராம. வயித்தியநாதசர்மா.**
அகத்தியான்பள்ளி.

---

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

சீரோங்கு நாவாய்கட் செறிதரங்கம்
புடைசூழச் சிறந்தி லங்கு
மேரோங்கும் பூமகட்கு யெழிலோங்கு
தானமென வியலா நின்று
தாரோங்குஞ் செம்மலராட் டணையரென
மேவுதன வைசியர் சார்ந்த
பேரோங்குந் தேவிநக ரெனும்பதியொன்
றிவ்வுலகிற பிறங்கு மாமால். 1

அப்பதியில் வைசியமா மரபிலரு
ணசலவே ளாற்றுந் தெய்வ
வொப்பில்பெருந் தவப்பயனு யுலகினுக்கோர்
நற்பயனு யுதித்த தென்றுஞ்
செப்பரிய புண்ணியமே வடிவுற்ற
தெனவுஞ்சீர் சிவமே தோன்றி
யிப்புவியி லுற்றெனவுஞ் சோமசுந்
தரக்குரிசி லிலங்கி னரால். 2

விளங்கிடுமீப் புனிதன்றூன் றவஞ்சில
மொழுக்கமுயர் குணங்கண் மேவி
வளங்கெழுமுன் முடிவேந்தர் பெறுதுவசம்
போலாது வபமா வோடே

துளங்கிடுமீன் முரசுபணி துறந்தறத்தின்
றுவசமதே தூக்கி யான்றோர்
உளங்குளிர வெஞ்ஞான்று முதவிபுரி
வள்ளலென உரைக்க நின்றோன். 3

அன்படக்கம் பெருந்தன்மை மதிநுட்பம்
விவகார மமைதி வாய்ந்து
வின்புறுநற் கலைமகட்கு மலைமகட்கு
மிருப்பிடமா யிலங்கும் மேலோன்
மன்புகழுந் தமிழ்மறையே மனத்துன்னி
நிருத்தன்றாள் மருவுந் தூயோன்
நன்புகழ்சேர் வள்ளுவனார் வாக்கியத்திற்
கிலகுமைந்தர் நல்குஞ் சீரோன். 4

அந்நாளி லமரரொடு யரசர்புரி
சிவபணியை யகில மெல்லாந்
தந்நாளி லெண்ணிலவா யாற்றிகும்ப
வபிடேகந் தழையச் செய்தே
யெந்நாளு மிவர்க்குநிக ரெவ்வுலகு
மில்லையென யிகை காட்டி
முந்நாளும் முதல்வள்ள லிவனெனவே
மூவுலகும் மொழிய நின்றான். 5

நின்றானைப் பொன்னுடன் றமரெனவே
கருதிதம்பால் நேர்ந்திட் டானே
பொன்றாத சுற்றமென வளைகையன்றன்
பக்கல்வரப் போதித் தானே
குன்றாலே புயல்தடுத்தக் கோமகனும்
நண்பனெனக் கூவி னானே
வன்றால்கீ ழிருந்தபிரான் றனதம்ச
மெனக்கருதி யழைத்திட் டானே. 6

என்னினைந்தோ யேந்தலிவ ரிடம்பிரிந்து
செழியர்பிரா னிருக்கை கண்டும்
மன்னியசெந் தூரான்றாள் வந்தித்தும்
பலதலங்கள் வழிபா டுற்றும்.

துன்னியசங் கரநயினு ராலயமுந்
துதிசெய்து புண்ணியந் தோய்த்
தன்னிகரிற் றலமிதுவே நெல்வேலி
யெனவுணர்ந்து சாருங் காலே. 7

இவ்வுலகை யொருவிடங்கா லங்குறுக
விறைகைலை யெந்தை யாகுஞ்
செவ்வணனுஞ் சிவகணங் கடனையேவ
யவர்சிவிகை யேந்தி வந்தே
திவ்வியருத் ரோத்காரி கடகமதி
யீரெட்டிற் றேய்வு நான்கிற்
கவ்வையிய மொடுசோம சுந்தரரைக்
கொடுகைலைக் கணுஞ்சென் றூரால். 8

இவை
மணி. சுப்பிரமணியஐயர்.
பண்ருட்டி.

---

## வெண்பா.

தேவியுறுங் கோட்டைத் திருநகரிற் றூமுறைந்து
மேவுசிவ வாலயங்கள் மிக்கியற்றுந்—தாவிலரு
ணுசலவன் பானுதித்து நாமமதும் ஞாலத்தே
சோமனெடுஞ் சுந்தரனைத் தோன்றி. 1

பெற்றமிவ ரெந்தைபதம் பேணுதலும் நீணிதியும்
அற்றவருக் கீந்துவக்கு மன்புமிருங்—கற்றறிவுஞ்
சுற்றர் தழுவுதலுந் தோன்றுமகப் பேறுகளும்
பெற்றுக் களிகூர்ந்ததின் பின். 2

நில்லா வுலகின்மை நித்தியமாய்க் கண்டுவத்தல்
புல்லர் செயலென்னப் புந்திநினைந்—தில்லெழிலின்
மெல்லியலும் பல்லுறவும் வேண்டத் தகுபொருளும்
எல்லவரும் ஈசனெனத் தேர்ந்து. 3

மங்கையொரு பங்குடையான் மாதேவன் றங்குமிடம்
எங்கெங்கும் போற்றி யினிதகன்று—பொங்கெழிலின்
மங்கலமாம் நெல்வேலி மாநகரம் தாமணைந்து
அங்கணரைப் பூசித் தமர்ந்து. 4

செப்புருத்தி ரோற்காரி சீராடித் திங்கள்தனின்
அப்பத்தின் மீதாங் கறுமிதப்தி—இப்புவிக்கண்
அங்கார வாரத் தமர்கடிகை பத்தின்பாற்
றங்கு சதுர்த்தசியிற் றான். 5

மிக்க வறம்புரிந்து மேன்மைகொள வாழ்மினெனத்
தக்க மகாருக்குத் தாமுரைத்து—அக்கணியும்
செக்கர்ச் சடைமுடியான் சிற்சபையான் பொற்புலகம்
புக்குப் பொலிந்திருந்தான் போந்து. 6

நின்றநிலை கேட்டுத்தண் ணீரகன்ற சேலவைபோல்
ஒன்று மிழுதகன்ற வொண்சுடர்போல்—நன்றாங்
கொழுகொம்பு மாங்ககன்ற கோலக் கொடிபோல்
முழுதுந் துயர்க்கடலுண் மூழ்கி. 7

தோன்றியவெல் லாநசிக்குந் தொல்லுலகி லீதியற்கை
ஆன்றவுளங் கோட லழகன்றே—என்றுபல
சான்றோர்கள் தம்மன்பாற் சாற்றும்பன் னூலுணர்ந்தே
ஏன்றவலல் தீர்ந்தெழுந்தே னின்று. 8

சோமசுந்தரதேசிகர்.

உருத்திரோத்காரி௵ ஆடி௴ 26௳

குருபூஜைமடம்
திருவாரூர்.

---

## ஆசிரியப்பா.

பொன்னகர் வளனினும் பொலிதரு வளமிகும்
தென்னா டாகுந் தெருவையின் முகமாம்
தேவையம் பதியிற் சிவனருள் பெற்றிடும்
தனபதி யென்னத் தனமிகு வைசியர்

செய்தவங் கூடித் திருவுரு வாகி
வருமரு ளாசல வணிகன் பெற்றிடும்
செய்தவ மகவாய்த் திகழ்ந்திடு சீலன்
தென்கலை முழுதுந் தெளிவுறக் கற்றோன்
காமுகின் மணியென காமுறு வள்ளல்
தீக்கை பெற்றுத் திருவாச கந்தினம்
பூசை செய்யும் புண்ணிய சீலன்
பன்னிரு திருமுறை பத்தியிற் கேட்போன்
குருபூ சைமடங் கோமிகுஞ் சாலை
அன்ன சத்திர மடியார்க் குறையுள்
தண்ணீர் பந்தர் தருமிகு நந்தனம்
இருமறை யோதும் பொருவினற் சாலை
திருவா டானைத் திருப்பணி முதலா
பலதலம் பணிகள் பண்புறச் செய்தான்
இல்லற மதனி லினிதாய் வாழ்ந்து
பொய்யெனத் தேறிப் பூவை வெறுத்துச்
சிவனடி சேரத் திருவுளங் கொள்ள
அவ்வர னிந்தே யடியரை விடுப்ப
தேவ விமானஞ் சீர்பெற வேற்றி
அன்புட னழைக்க வவர்பணி யேற்று
வேத கோஷங் கீதமிகு பாடல்
நாதமிகு துந்துபி நால்வரின் பாடல்
அரகர முழக்க மார்கவி மூட
ஐந்தருப் பொன்மலர்ந் தமரர் பொழிய
உருத்தி ரோற்காரி யுயர்தக்ஷ ணாயனம்
கடிமிகு வேனிற் கடக மதிசேர்
அபர பக்க மாறுறு பத்தின்
திகதி யாரற் றிகழ்தரு வாரம்
ஈரிரு திதியி னிணைபூ ரட்டாதி
சோபன யோகம் பவவா கரணம்
சோம சுந்தரத் தூயவருட் கோன்

கன்னி யோரையிற் கயிலையின்
கன்னி பாகன் கழல்சேர்ந் தனனே.

இது இயற்றியது,
ஐ. சுப்பிரமணிய தேசிகர்.
வேதாரணியம்.

---

## வெண்பா.

சைவத்திற் கோர்குறையே தாரணியோர்க் கோர்குறையே
மெய்வைத்த பூதியுடன் மெய்ப்பத்தி—செப்பச்
சிவனார் மகிழ்சோம சுந்தரனுஞ் சீமான்
பவநீங்கு பான்மைபது பார். 1

### அறுசீரடியாசிரிய விருத்தம்.

திருமுறை நாளுந் தேறிச் சிவனிடத் தன்பு பூண்டு
வருங்கவி வாண ருக்கு வாரியே கொடுக்கும் வள்ளால்
பெருமையிற் சிறந்த சோமசுந்தரப் பெரியோய் நீயிங்
கரும்புதல் வரைவிட் டெங்கே யகன்றனை யாற்றே னற்றேன். 2

சிவன்றனை யிடையறாது சிந்தித்துத் தெளிதல் செய்து
பவந்தனை நீக்கிக் கொள்ளப் பகருட றடையென் றெண்ணி
யுவந்துநீ விட்டா யேனு முன்னையே நம்பு நாங்க
ளுவந்திடா திதனைச் செய்த துத்தம தருமோ வம்ம. 3

மனைவியு மக்க டாமு மற்றுல குள்ளோ ரியாரும்
நினைநினைந் தலறச் சென்றாய் நீதியோ வென்று நாங்க
ளெனசொலி னும்மெ னெங்க ளிடரினை நீக்க வல்ல
தனபதி யினியென் றுன்னைத் தரணியிற் காண்பே மம்ம. 4

சைவசித் தாந்தந் தன்னைத் தானுணர்ந் திட்ட வாறே
தெய்வத்தைத் தினமும்பேணித் திருப்பணி பலவுஞ் செய்தாய்
செய்வதற் கரிய வென்று செப்புதற் கொன்று மின்றிச்
செய்வதற் கரிய யாவுஞ் செய்தநீ சிவமே யாவாய்.

நீசிவ மான தாலே நின்மர பென்றும் வாழ்க
மாசிலா நின்னைப் போல மற்றுநீ செய்த வெல்லாந்
தேசுற வோங்கி வாழ்க வென்றியான் சிவனை யென்றும்
ஆசற வேண்டு கின்றே னவனருள் புரிகு வானே. 6

பொ. முத்தையபிள்ளை.
தூத்துக்குடி.

---

## வெண்பா.

ஆருருதி ரோற்காரி யாடிமதி சேய்வாரம்
பேரும்வா ளுழிநாட் பிற்சதுர்த்தி—சேருமெழிற்
றாயமணி யாநேருஞ் சோமநற் சுந்தரனே
பாயசிவ மாயினனே பார்.

### கட்டளைக் கலித்துறை.

துன்னு மருள்பெறுந் தொண்டர் புராணந் துலங்குறுசீர்
மன்னு திருவிளை யாடற்புராண மனனமுறப்
பன்னுங் கருணைநற் கந்த புராணமும் பாடவுவந்
துன்னுங் குரவர் தமிழ்வேத மன்புற வோதுதியோ.

### ஆசிரிய விருத்தம்.

ஆதுலர்க் கன்னே தான யருங்கல்வி யறிஞர்க் கன்பாய்
யேதிலர்க் கிடும்பை யான யெண்ணி நல்லருள் சுரந்து
மேதினி தன்னிற் சைவ மேனுற நாட்டி வந்தாய்
சோதிதாள் வணங்குஞ் சோம சுந்தரத் தோன்ற னீயே.

### கலி விருத்தம்.

மனையு மைந்தரு மற்றுள சுற்றமு
மினைய வெம்பவ மெண்ணி யகற்றியே
துனைய நல்லருட் டுயே சிவகணம்
புனைய விசன் புனைகழன் மேவினே.

## ஆசிரியப்பா.

உண்மை யறிவா யுயரா னந்தமா
யெண்ணி லுயிர்க்கு மினியவா ருயிராய்ச்
சலத்தின் றண்மை தழலின் வெம்மை
யலர்மண மெனத்தனை யகலா தமர்ந்தே
யிருளறப் பல்லுயி ரீன்ற பெண்மை
யுருவா கியதன் னேனுங்கு மானந்த
வண்மைசேர் வல்லி மகிழ்வுற வெவர்க்கு
மண்மைய தாக வம்பலத் தாடு
மருட்பே ரொளிதா னறுபத்து நான்கு
திருவிளை யாடல் செய்திடு நாடு
பலனுறு தாமிர பர்ணியே முதல
வலனுறு தீர்த்தம் வயங்கிடு நாடு
முச்சங் கத்தினு முத்தமிழ்ப் புலவர்
முச்சகம் புகழ முன்னுறு பதியா
யெச்சகத் தோர்க்கு மெண்ணிய பேறு
நிச்சயம் வழங்கு நிகரிலா மதுரை
யாதிபாம் பதிக ளமைந்திடு நாடு
வோதிய நாட்டி லுயிரெனத் தேவி
கோட்டை பென்னுங் கோலவந் நகரு
ணாட்டிடுஞ் சீரினர் நாடுமப் பதியிற்
குலவுறு நிதியிற் குபேர னெனவுங்
கலைபயி னெறியிற் கடமுனி யெனவும்
வணிகர் மரபில் வயங்கு மேருடைக்
குணிதரு மினுப்பைக் குடியது தன்னின்
மேனு வகைபெறு மேற்குண வகுப்பி
லானு வருளரு ணாசல வணிக
னன்ன மனநடை யலர்மேன் மங்கை
தன்னை மணந்து தவப்பயன் றன்னு
லரும்புணை யாகு மஞ்சக் கரமும்
வரும்பிணி யகற்றும் வளனுறு பூதியு
முருத்திர மணியு மோங்கிடும் சைவம்

வருநெறித் தலைவர் வையகத் தொளிரக்
கல்வி யறிஞர் காதலின் மகிழ
நல்லியற் சுற்ற நானிலத் தோங்க
விரவலர் தாமு மினிதுளங் களிக்கப்
பாவு மமிர்தெனப் பார்தனி லுதித்துச
சோமசுந் தரனடி சோர்வற மனஞ்செயுஞ்
சோமசுந் தரப்பெயர் தொன்மையிற் பெற்றன
னன்னவன் கலைமக ளம்புய மங்கை
யென்னு மணங்கின ரினிதுளங் களிக்க
மண்ணகத் தவர்கண் மதித்திட வளர்ந்து
விண்ணகத் தவரும் விரும்பிடப் புவியி
லிலக்கண விலக்கிய மின்புறக் கற்றுக்
கலக்க மறவே கற்றுச் சைவநூ
றீதறச் சைவ தீக்ஷைகள் பெற்றே
யேதமில் பூதி யிலகுமணி புனைஇப்
பழுதறச் சிவார்ச்சனை பத்தியிற் புரிந்து
வழுவற வில்லறம் வளர்த்திட மதிஇக்
காமர் மயிலன காந்தி மதியினைத்
தோமற மணந்தே சொல்லருந் தவத்தா
லருணிதி யென்ன வருணா சலத்தையு
மிருமணி யென்ன விராமநா தனையு
மலர்த்திரு வலர்மேன் மங்கை தனையுந்
துலங்குவிட் பசுமேர் சுந்தரே சனையு
மிலகுவான் றருவன விலக்கு மணனையுந்
திலகமணியெனத் திகழ்ந்திடத் தந்து
காமரு குணநிதிக் காந்தி மதிதான்
றேமரு மலருறை திருமக ளெனவே
வில்லற வொழுக்க மினிதுற வியற்றி
யல்ல றருமுட லகற்றிட வுன்னித்
தன்கா தலனுந் தனயருங் கலங்க
மின்னன வுடல்விடீஇ விண்ணக ருற்றிட
மங்கல மாக மகாருஞ் சுற்றமு

மிங்கித மாக யினிதே யுவக்க
மதிநே ரலர்மேன் மங்கையை மணந்து
விதியுழி யில்லறம் வேறற வுஞற்றிக்
காந்தி மதிதரு கழியுறு மகார்க்கு
வேக்தெழின் மணங்க ளினிதுறப் பண்ணி
யெண்ணா று வனப்பி னிராமநாதன்
மண்ணகத் தியாக்கை மடிந்திடத் துயர்கொளீஇ
யன்புடைத் தன்மனை யலர்மேன் மங்கை
யின்புடன் கருப்ப மினிது தாங்கொளீஇ
யலகில்சீ ரரமக ளனவிலக் குமியைப்
பலவளம் பெருகப் பார்தனிற் றரவே
களிப்பொடு பயந்தவக் காரிகை தனக்கு
வளிமொடு மருங்கடி யாற்றியே விதியாற்
காதீலின் மதிபன காந்தி மதியெனு
மாதரசி தன்னை மதியெனத் தந்தனன்
குழுவுறு வளவயற் கோவிந்த மங்கலஞ்
செழுநீர்ச் செந்நெற் செய்யுறு காரைக்
கோட்டை பென்னக் குலவு பதிகட்கு
நாட்டுச்சீர் சமீந்தார் நரபதி யாயின
னெவ்வறங் களுமே யின்புட னியற்றி
மவ்வலங் குழலுடை மனைவி மக்கள்
சுற்ற மித்திரர் துயரற வாழ்ந்து
கற்றநூற் புலவர்க ளித்திட வறுபதா
மாண்டினிற் செய்யு மருங்கடி வினையு
நீண்டிடு தில்லை நிகரறு பதியில்
விதியுழி யியற்றி விடுற வுனீஇச்
சிற்றம் பலத்திற் சிற்ச பேசனை
நற்றவப் பயனு னலமுறத் தரிசித்
திப்பவ மறவே யினிதுற வணங்கிக்
கங்கை யாதியாங் கணிக்கருந் தீர்த்த
மங்கை தன்னொடும் வந்து படிந்தே
யில்லற வின்ப மினிதுற நுகர்ந்தே

யில்லற மனைவி யினிதரு மகார்கண்
மண்பொன் வான மனமுறத் துறந்தே
யெண்ணிறத் துவமுண ரின்னருள் யோகரி
னில்லறம் புரிந்த வில்லினைத் தணந்தே
நல்லரு ளுருவாய் நானிலத் தருள்செயுந்
தாமரை மகளிரைத் தன்கணு வுடைய
சேம வருணிதி சேருமீ னாட்சி
மூலவி லிங்கமாய் முளைத்திடுஞ் சோதி
யாலவா யண்ண லபிடே கங்களைக்
கரையறு பிறவி கழித்திடத் தரிசித்
துரைபெறு மதுரை யுவப்புட னகன்று
திருநெல் வேலித் திருப்பதி சென்று
தருஞ்சீர் நன்னதித் தாமிர பர்ணி
வினைகெட மூழ்கி மிளிர்தா மிரசபை
தனையடுத் தன்பொடு தண்சுடர் வடிவாந்
திருநெல் வேலிச் சின்மயத் தேவை
வுருகு நெஞ்சத் துவப்பொடு பணிந்து
சிற்சில காலஞ் சிறப்பொடங் கிருந்தே
யற்பக லானை யகந்தனி லுன்னி
யுருதிரோற் காரி யோருறு மாடி
வருசேய் வார மதிகுறை சதுர்த்தி
பதினு றென்னப் பன்னுநா ளதனிற்
பதியரு டன்னுற் பரசிவ மாயினன்
சோமசுந் தரனுயிர் சோதியின் வாழ்க
மாமனு வழியுறு மைந்தர்பூ வாழ்க
சுற்றமித் திரருஞ் சுகத்துடன் வாழ்க
நற்றவத் தவர்க ணலம்பெறி இ வாழ்க
பவமறுத் தருளும் பரனருள் வாழ்க
சுத்தநற் சைவந் தொன்மையி
னுத்தமோத் தமமா யோங்குக வுலகே.

யாழ்ப்பாணம்,

கா. இராமநாதப் புலவர்.

# ஆசிரியப்பா.

பூமிசை நிலீஇய பொற்புறு வரசினே
முத்தமிழ் மன்னர்தா முதன்மைத் தாயவே
அப்பெருந் தமிழ்மொழி அகரவுண் மையை
செப்புவ தரிதெனத் தெளிவிற் கூறுதும்
பல்வளஞ் சுரக்கும் பாண்டி நன்னாட்டின்
மலைமக டுணைவனை மணம்புரி நாளினி
லமரர் வீற்றிருந்த வப்பெருந் தலைநகர்
தேவ கோட்டை சிறப்பின் மிக்கவை
அருணா சலமெனு மருந்தவ வள்ளற்குப்
புத்திர னாகிப் புவிதேய்த்த புகழினன்
சோமசுந் தரமெனுஞ் சுவைபொழி மேகந்
திருவளர் தில்லைத் திருச்சிற் றம்பலத்
தொருவனு முமையு முலவுயிர்த் தோற்றத்து
மைத்திரை ஞால மாயமென் றுணர்வுறீஇ
தத்துவங் கடந்த தன்னுணர் வெய்திய
தொன்மை மாக்களின் றொடர்பறி யுண்மை
கலியின் வலியாற் கைவிடா நிறீஇய
மதிபொன் னவிர்கொன்றை மராங் கோதைசூடிப்
பிறங்கு வேணிப் பெருமா னார்க்கிடம்
தேசங்க டோறுஞ் சிறப்பின மைப்ப
ஆலயந் தீர்த்த மாங்காங் கியுற்றுபு
ஆகம விதிமுறை யடைவி னூற்றிப்
புத்தே ளுலகும் புரைகொளச் சிவணி
மறை நவிலந்தணர் மாதவத் தூய்மையர்
நறைமல ராய்வோர் நந்தனத் தாரொடு
வல்சியுங் கூறையு மொல்லுன வருளி
நாவலர் பாவலர் நற்றவர் மெய்ப்ப
அறத்துறை வழாஅ தன்பினின் றூற்றி
பொறைதவம் வாய்மையிற் புனித மேலோன்
இல்லறந் துறவற மிருவகை யுண்மை

நல்லறம் நான்மறைப் பொருள தாமெனச்
சாம்பவி பைரவி சார்ந்த கேசரி
ஓமெனுஞ் சிவமதே யுலவு சத்தியா
எண்வகைத் தோற்றத் தெழுபத் தீராயிர
நாடிக ளாய நலிநொய்ய பூதமா
உயிரின மாகி யொடுங்குஞ் சிவமதில்
எல்லாஞ் சிவமென் றெழுமொலி சத்தி
சத்தியி னிசை தானடங் குஞ்சிவம்
இத்திற வுண்மையி னெழுந்த நான்மறை
சொற்றிற மற்றிடஞ் சோதியா மென்பர்
சோதி யாயதே சொரூப சித்தியாம்
அந்தக் கரணங்க ளோய்ந்தறி வரகிச்
சந்தித்து நின்றார் தானறி குவரால்
சத்தே யசத்தாச் சாருருத் தோற்றஞ்
சித்தா மன்னத் தெளிவி னினிதாய்
ஆர்கலி ஐயா யிரமிரு பானுன்கிற்
றேர்தரு ருத்திரோற் காரியாட் டையாங்
காரிரு வீரெட் டாங்கட கம்மதி
செவ்வாய் நன்னாட் சிறந்த சதுர்த்தியும்
மீன்பூற ட்டாதி மிளர்கடிகை பத்தினே
தாம்பிற னுகச் சமாதி
அங்குலி யோகத்தால் நீழல் வைகினன்.

---

திணை:—பாடாண்டிணை;—துறை:—பாடாண்பாட்டு.
அங்குலியோகத்தால்நீழல்வைகியசோமசுந்தரவள்ளலைப் பாடியது

ந. பொன்னுச்சாமி,
நியமன்பட்டி.

---

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது

யீத லெளிதே மாவண் டோன்ற
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

திணை. பொதுவியில் துறை பொருண் மொழிக்காஞ்சி.
மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

---

## விருத்தப்பாக்கள்.

---

புண்ணிய நின்று புலம்புறத் தேவர்
புஷ்பமே மழையெனப் பொழிகக்
கண்ணியப் பூஜை கலங்குறச் சகல
கணங்களும் வாய்விட்டுக் கதற
மண்ணினை நீத்துப் புறப்பட அமைத்த
மறைவலோன் காண்கிலம் வந்தாற்
கண்ணினை திருகிச் சிரத்தையும் திருகிக்
கடுஞ்சிறை யிடுவதிற் கலங்கேம். 1

என்னவந் யாயம் மதுரைக்கு வந்தார்
இரங்கினர் கற்பகக் கரத்தார்
பன்னநா வொன்று போதுமோ தெய்வ
பக்தியை வியந்துறப் புலவோர்
சொன்னயம் கொண்டு தொகுக்கவும் எலாச்
சோமசுந் தரப்பெயர் தொனிக்கத்
தன்னயம் கருதா தீந்ததைய் யாயிரம்
சாற்றயார் எவர்தரம் தக்கார். 2

திருச்செந்தின் மேவி ஆலய சேவை
செய்தனர் தபசுக்காய்ச் சென்றார்
அருட்செந்தின் மேவும் அற்புத நாதர்
அழைப்பதை யாரறிந் தனரால்
கருச்செந்தில் வாழும் கடவுளர் அரசர்

கண்ணென மகவெனக் கழறத்
திருச்சுத னாகப் பிறக்கவோ சென்றாய்
செல்வமே தேவர்நா யகமே. 3
மக்களின் றொருபுறம் மழைமுகம் காட்ட
மருக்ணும் கிருஷ்ணவேள் மயங்காத்
தக்கவன் சுவற்பம் தயக்குறச் சகல
சனங்களும் கடற்கண்ணைக் காட்ட
இக்கணம் பிரிந்தால் எப்படி மறக்க
இயலுமோ அறிகிலோம் எந்தாய்
சொக்கலிங் கேசன் தோழனைச் சென்ற
சோழசுந் தரப்பெறுந் துறவோய். 4

ஆயிர தொண்ணூற் றெட்டெனும் ஆண்டில்
ஆடியீ ரெட்டினிற் செவ்வாய்
அற்புத உருத்ரோத் காரியின் வருடம்
அன்றுனற் சதையம் பின்னவளாம்
மாயிரு ஞாலம் துறந்ததெங் கோமான்
வானவர் தானவர் வணங்க
வள்ளலாய்ச் சென்று அங்கணும் கொடுத்தான்
மகிபதி சத்திரப் பதியான்
தூயமா பூசை செய்வதே முக்ய
ஜோவிபாய் ஆவலாய்த் துணிந்தோன்
தோடகச் சனியார் திசையலோ இந்தத்
துணுக்கத்தைக் கொடுத்தது தொலைய
நாயக மாகி மக்களும் செழிக்க
நன்மனை அறமெலாம் பழுக்க
நவின்றனன் தூற்றுக் குடியினில் வாழும்
நலபெரு மாளிது மன்னே. 5

கிருஷ்ண னெம்வலக்கை யென்றுரை பகர்ந்த
கிருபைவாய் கிடைப்பது மென்றோ
தருணத்திற் கேற்ற உசிதயோ சனைகள்
சாற்றிடக் காண்பது மென்றோ

பொருள்மணம் மணக்க லோபியா தீந்த
புகழினிப் பார்ப்பது மென்றே
தெருள்மணம் மணக்குந் தேவ லோகத்தின்
சிறப்பினிற் கொலுவமர்ந் தவனே. 6

தேவர்மா நகரச் சிறப்பினிற் களிக்கும்
செயலையெவ் வாறுனீ துறந்தாய்
மூவர்வாய்ப் பண்ணை முறையொடு பாடி
முடிப்பதெவ் வாற்றலின் முடித்தாய்
நாவலர் தமக்குத் தானகற் பகமாய்
நடிப்பதெவ் வாற்றலின் விடுத்தாய்
ஆவலோ அதிகம் சோமசுந் தரப்பேர்
அமைந்தவா அறம் அமைந்தவனே. 7

சிந்துபூந் துறையின் நதிக்கரை யோரம்
செல்லவோ இல்லைவிட் டெழுந்தாய்
முந்துதா மரையும் குவிதரு முகத்தை
முதிர்வொடு பார்ப்ப தெக்காலம்
அந்தமில் சோதி இந்தவா றமைத்த
அவதியை அறிகிலோம் அந்தோ
எந்தைநின் னுடம்பு ஈர்ப்பினும் புகழோ
ஈறிலா தெனமகிழ்ந் தனமால். 8

தொலையினி லிருப்பார் தொழிலினி லிருப்பார்
துறைமுகச் சூக்ஷியி லிருப்பார்
கலையினில் வலியார் கண்ணுர எழுதும்
கருத்தையார் கணக்கிட வல்லார்
பலகலை தெரிந்த சோமசுந் தரப்பேர்
பக்தனே கணக்கிலும் வலியோய்
சிலபக லிருக்கச் சிவச்செய லில்லை
தெய்வத்தின் செயல்பெரி தம்மா. 9

கிருஷ்ணனை மறந்த தெவ்வண மறியோம்
கிருபையை மறந்ததை அறியோம்

அருச்சனை மறந்த ததிசயம் அறியோம்
அருமையில் லறமறந் தனையோ
தருமமே உருவாய்ப் பிறப்பமைந் தவனே
தருங்கொடை நெடுங் கரத்தோனே
இருமையும் கருதிச் சிவபிரான் கழற்கு
எழுந்தையோ யாங்களென் செய்வோம். 10

வாழியாந் தேவகோட்டை வாழ் ஜனங்கள்
வானவர் தானவர் வாழ்க
ஆழிசூ ழுலகம் அடங்கலும் வாழ்க
அரனடி யார்களும் வாழ்க
பூழியே அறியாச் சோமசுந் தரப்பேர்ப்
புண்ணியர் மோக்ஷத்தில் வாழ்க
நாளுமே அவர்தன் தொழில் மக்கள் வாழ்க
நவின்றனன் நலபெரு மாளே. 11

தங்கள்,

கவிராயர், நல்லபெருமாள்.

---

திருமருவு தேவையம் பதியிலெண் டிருவெலாந்
தினமுமே லோங்கிடத் திகழ்ந்து
தருமமே யுருவெடுத் தனைய வந்தைங்கரன்
சண்முகன் சங்கரி யரனோ
டரியையிற் சீதர னடிபணிந் தில்வாழ்ந்
தறமுளுற் றியரு ளார்ந்து
மருவுசிவ பதமணி சோமசுந்தர
ஜமீந்தாரி நின்வாழ்வு நல்வாழ்வே.

ரெங்கராமானுஜய்யங்கார்,

அரியக்குடி.

---

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பூத்த தேவைநகர்த் திருவுடையா னுருவுடையான்
செம்பொன் முன்னுப்
பேர்பூத்த கொடையுடையான் பீடுறுநன் னடையுடையான்
பிறங்கு பன்னூல்
ஏர்பூத்த மனமுடையா னெழில்பூத்த வின்முடையான்
இறைவன் றாட்காம்
நீர்பூத்த பணிகளெலாந் தன்னதென நெடிதியற்றும்
நேர்மை யாளன். 1

சிவசமய வைசியர்தன் றிருக்குலத்தில் நடுமணியாத்
திகழுந் தூயோன்
அவசமயம் பாறவந்த வெங்க ளருணசலவே
ளக்நா ளாற்றும்
தவசமயத் தாலுதித்த மக்கள்பல ரன்னவரிற்
றன்னை யொப்பான்
திவசமயன் மால்காணுச் சிவபரன்றாட் கன்புசெயும்
திறத்தின் மிக்கோன். 2

தந்தைமகற் காற்றுநெறி புரிந்தாலு மகன்றந்தை
தனக்கிங் காற்றும்
அந்தநெறி யிந்தநெறி யாகுமெனக் கண்கூடா
யறிவித் தியார்க்கும்
சொந்தநெறி சிவனடியே தொழுநெறியென் றுறுதிமொழி
சொல்லுந் தூயன்
எந்தையரன் றோழரென வில்லறத்தை நெறிதிறம்பா
தியற்று மேந்தல். 3

அன்புருவா மபயகுல சோழனென வநபாய
வரச னென்ன
என்புருக வருட்பாக்க ணிசைத்தருவி கண்காட்ட
இன்பத் தேப்வோன்
றன்புருவ நெறிவழியே செல்தநய ராதிபரை
தனதன் போன்று

வின்புருவத் தெஞ்ஞான்று நன்னெறியி லிருக்கவைத்த
வெழிற் பூமானே. 4

ஈத்துவக்கு மின்பநெறித் தந்தையென வீத்துவந்திங்
கிசைந்தோர் தம்மைக்
காத்துவரு திறமறந்து நஞ்சோம சுந்தரமால்
கயிலைக் கண்ணும்
பாத்துவந்து பணிபுரியப் பாறியது பரிவாமோ
பண்போ பார்முன்
நீத்துவந்த துறவியரு மக்களிடத் தன்பகலார்
நீத்த லென்னீ. 5

தாய்மறந்த குழவியைப்போற் றவிக்கின்ற நின்மனைவி
தனையும் பாராய்
வாய்மறந்து குழறியழுமு டன்பிறந்தார் மற்றையரை
மகிழ்ந்து காணாய்
கூய்மறந்து மறந்தழையாக் கோமருகன் றனையண்மிக்
குறிக்கொண் டோராய்
நோய்மறந்து நின்றழைக்கு மிரவலரைச் சிறிதேனும்
நுனித்து முன்னாய். 6

நின்னுடைய நேயர்பலர் நினைந்துநினைந் துளமுருகி
நிற்கின் றாரை
யென்னுடைய நண்பீர்நீ ரென்வருந்திக் கலங்குகின்றீ
ரென்னா யந்தோ
பொன்னுடைய நாயகனும் புகவரிய சிவபதநீ
புகுதப் பெற்றால்
மன்னுடைய நேயர்களை மறந்துவிடல் மரபாமோ
வருத்துக் கூறாய். 7

எத்தனையோ சிவபதிக ளிருந்தாலு மவற்றுளெலா
மிறைமை வாய்ந்த
வித்தனைய தலந்தீர்த்த மூர்த்தியிவை முச்சிறப்பும்
மிகநன் கோங்கி

யத்தனையே தந்தருளு மருநெல்லைப் பதிப்பெருமை
யறிந்தா ராய்ந்து
வித்தனையா விதன்பெருமை யெனவியந்து யிதுவேயெற்
கேய்ந்த தென்னு. 8

பூதிசாதன முடையா ருடன்போதச் சிவதலங்கள்
பலவும் போற்றி
சோதியா முத்தருட னௌிமதியார் வளர்நெல்லிச்
சுகமே போக்கி
ஆதியா ராண்டுருத்தி ரோற்காரி யாடிமதி
யபர பாகத்
தோதியா வருஞ்சதுர்த்தி யொண்டிருநா ளரன்பாதத்
தொளிர்ந் திட்டானல். 9

---

## நேரிசை வெண்பா.

சீருருத்தி ரோற்காரி சேராடிச் செவ்வாய்நாள்
ஆரபரப் பக்கத் தருஞ்சதுர்த்தி—நேர்திதியே
தேவையரு ணஞ்சோம சுந்தரச்சி மானெல்லைத்
தேவையுற்ற சீர்த்தினமாத் தேர்.

இங்ஙனம்.
சித. கோ. சு. சுந்தரமூர்த்தி பௌராணிகர்.
வண்ணார் பேட்டை
திருநெல்வேலி.

---

ராமநாதபுரம் ஜில்லா தேவிகோட்டைத்
தோல்குடி வணிகர் திலகமும், சிவப்பழமும்,
சிறந்த கோடையாளியும் பிரபல தனவைசிய ஸ்ரீமானுமான
**அரு. அரு. சோம.**
**சோமசுந்தரஞ்செட்டியாரென்னும்**
சத்திரம் சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்

## சிவப்பேறடைந்ததைக் கேட்டபோது பாடியவை.

சிவப்பழமே சிவவுருவே சிவஞானத்
திருநாவே சிவத்திற்றேய்ந்த
தவப்பழமே திருநெல்லை நாதனுன
தநுபூதி சார்ந்த தேகத்
துவப்பினுன தருமுயிரைத் தன்னிடத்தே
வரவழைத்திங் குயர்ந்தவுன்றன்
பவக்கடலைக் கடந்திட்ட வாருயிரைத்
கருணையொடு பறிக்கொண்டானே. 1

நகரத்தார் தவப்பயனுப் நாடுபெறும்
புண்ணியமாய் நண்ணி நின்றே
பகரத்தா னமையாத பண்பாரும்
திருமுகத்தோய் பண்பார் சோம
சிகரத்தான் சுந்தரன்றன் திருப்பெயரிற்
சிறந்தவனே செய்ய நாவோய்
தகரத்தா லயமுடையான் பற்றகலா
வுள்ளமென்றுந் தழுவி நிற்போய்! 2

புகழ்வேண்டிப் பொன்னளிப்போர் பூவுலகிற்
பலருளாற் புகலி னுன்போற்
பகலிரவென் றறியாமற் றகுதியினைத்
தவவோர்ந்து பகர்வார் பொன்னை
மிகவறியே னினிப்பெரிய புராணத்தைத்
தேவார மேவு சைவத்
தகவுறையுந் திருமுறையைப் பண்ணேடு
தலமுறையாச் சாற்றற் கியாரே? 3

வானரவீ ரர்நிறைந்த மதுரையினில்
நின்குணத்தை மதித்துக் கண்டேன்
தேனமருந் தேவிகோட் டையினினது
சிவதேசைத் தெரிசித் தேன்யான்

வானமர ரதனிடத்துக் கொண்டவா
சையினன்றோ வாழ்த்தி யுன்னைத்
தானமரத் தம்மிடத்தே கொண்டேகிச்
சிவலோகந் தனிலே வைத்தார். 4

“ வித்துவா னிவரிவர்க்குச் செய்யபரி
சளித்தனுப்பாய் விழைவி ” னென்று
தத்துவார் கடல்சூழும் புவியறியப்
புத்திரர்க்குச் சாற்றி நின்ற
உத்தமா வுனதுருவ மினியொருக்கா
லிவ்வுலகிற் காண்ப தொன்றோ!
சத்ததா துவினான வுடற்கிறப்புச்
சகசமெனச் சார்கின் றேனே. 5

சிவத்தியாநாநந்த மகர்ஷி.

---

## வெண்பா,

மாவின்பேர் மங்கலங்கம் மல்குமெழில் கோட்டையின்
மால்செமீந் தாரெம் மதியழகன்—சீலமுடன்
தென்கமலை யீசனெழிற் சீர்பாத மன்புடனே
தங்கினான் சீர்பெருகத் தான்.

## விருத்தம்.

தஞ்சமென் றவர்க்குதவுந் தயாநிதியே தண்ணளிசேர்
முகங்காண் போர்க்கு
அஞ்சலென வாய்மலர்ந்து அன்புமிகப் பாராட்டி
யாதரித்து வுயர்
மஞ்சுதனை வென்றநிதிக் கொடையுடையாய் மானிலத்திற்
புகழை நாட்டிப்
பிஞ்சுமதிச் செஞ்சடையா னருளவிரும்பிப்
பிரிந்தனையோ மதிவல் லோனே.

சு. சாமிஐயாதேசிகர்,
திருவாரூர்.

---

## சிவபதம் அடைந்தனர்.

தேவகோட்டை ஸ்ரீமான் அரு. அரு. சோம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் ஆடிமீ 16உ மங்களவாரத்தில் திருநெல்வேலியில் சிவபதம் அடைந்தனர். இக்குணவான் சிவபக்தியில் மிக ஈடுபட்டவரானதால், சிவசாயுஜ்ஜியத்தை அடைந்திருப்பாரென்பது திண்ணம். இக்கனவானை எனக்கு நேரில் பழக்கமானதால் "நெருப்பு தெரிந்து சுட்டாலும், தெரியாமற் சுட்டாலும் சூடு ஒன்றுதான்" என்று நினைத்து ஆரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவில் பஞ்சாயத்தை ஒழுங்காய் நடத்தப்படவில்லையென்று கேள்விப்பட்டு உடனே ராஜிநாமா கொடுத்தவர். அவர் பிதாவாலும் அவராலும் பல சிவாலயத்திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் செய்து வைக்கப்பட்டது. இதர தர்மங்களும் அநேகம் செய்திருக்கிறார். இரப்போர்க்கு இல்லை என்று சொன்னதே இல்லை. திரிகரணசுத்தியுள்ள இந்நற்குண புத்திமான் பரமபதம் அடைந்த விஷயத்தில் எவ்விதத்திலும் பிதாவிற்கு மேம்பட்டவராக சொல்லத்தகும். வயதுவாய்ந்த சிரேஷ்டகுமாரனை ஸ்ரீமான் அரு. அரு சோம. அருணாசலஞ்செட்டியாரவர்களுக்கும் அவர் சகோதரர் இருவருக்கும் மற்றைய குடும்பத்தாருக்கும் எமது அநுதாபத்தை இப்போதினியின்மூலமாய் தெரிவிக்கிறோம்.

ஆரூரன்.

---

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் ஆடிமீ 18-ம்உ அனுப்பிய கடிதம் கிடைத்தது சிவநேசச் செல்வர்களான தங்கள் அருமைத் தந்தையாரவர்கள் 31—7—23-ல் ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய திருவடிநீழலையடைந்தசெய்தி தெரிந்து மெத்த வருத்தமடைகிறேன். நகரத்தார்களுக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும், நல்லபாஷாபிமானியாகவும் விளங்கிய அவர்களுடைய முதிர்ந்த சிவபக்திக்கேற்ப, அவர்களுடைய அந்தியகாலம் தக்ஷிண கங்கையாகிய தாமிரபர்ணி தீரத்தில் முக்தி க்ஷேத்திரமாகிய திருநெல்வேலியில் ஏற்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதே. இந்த சமயம் அங்கே வந்து தங்களைப்பார்த்துவர எண்ணியும் இங்கேயுள்ள

சில அஸௌகர்யங்களால் அங்ஙனம் செய்யக்கூடவில்லை மன்னிக்கவேண்டுகிறேன். என் அனுதாபத்தை இதன்முகமாகத்தெரிவிக்கிறேன்.

இங்ஙனம் அன்பன்
வே. சாமிநாதன்.

---

மகா-ா-ா-ஸ்ரீ அரு. அரு. சோம.
அருணசலஞ்செட்டியாரவர்களுக்கு.

அன்புள்ள ஐயா!

தங்கள் அருமைத்தந்தையார் சிவபதமடைந்தசெய்தி மிக்க வருத்தத்தைத்தருகிறது. தங்களுக்கு இது பொறுத்தற்கரிதாயிருக்குமானாலும் அறிவால் தேறுதலடைதல்வேண்டும்.

மிக்கசெல்வமும் தொக்கநுகர்பொருளு மிருப்பினும் காலமென்றொரு பொருள்கடக்கலாவதோ! இவ்வுண்மையை நினைத்தலானது தந்தையார் பிரிவைக்குரித்து அவலமடையாமல் மனந்தெளிந்து செய்யத்தக்கதைச் செய்தற்கு உறுதிபயப்பதாகும்.

(பிரபவாதி) 57-ம் ஆண்டில் செப்பம்பலத்தலத்தில் துஞ்சியவர்குமாரரும் காரியத்திற் கண்ணுயிருக்கவேண்டியவருமாகிய தங்களுககு, 'முழுமுதல் தொலைந்த கோளியாலத்துக் கொழுநிழனெடுஞ்சினை வீழ்பொறுத்தாங்குத் தொல்லோர்மாய்ந்தெனத் துளங்கல்செல்லாது நல்லிசைமுதுகுடி நடுக்களத் தழுவினன்' என்றும் 'நல்லபோலவும் நயவபோலவும் தொல்லோர்சென்ற நெறியபோலவும் இடையேபுகுந்து தீங்கிழைத்தற்குச் சுற்றித்திரியும் அயலாருடைய சலமொழியைக்கொள்ளக்கூடாது' என்றும் (புறநானூறு) 58-ம் பாட்டில் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியைக் குறித்துக் காரிக்கண்ணனார் கூறிய உறுதிப்பொருளை மறவாதிருப்பது அடுத்ததாகும்.

இங்ஙனம்
இ. வை. அனந்தராமையர்.

உ

நமது மகைஸ்வரிய செல்வச்சிரஞ்சீவி அருணாசலஞ்செட்டியாரவர்களுக்கு, ஸர்வைஸ்வரிய ஸர்வஜயசித்திகளும் மேன்மேலும் பெருகிவளர்க.

உபயக்ஷேமம்.

தங்கள் அநபாய சோழதுல்ய செல்வத்தந்தையாரவர்களதுஉத்தரகைங்கரியங்கள் இன்று பதினாரும்நாள் தாங்கள்முடித்துக்காரியங்களாயிருக்குமென்று நினைக்கின்றேன்.

தங்கள் தந்தையாரது ஸர்வைஸ்வரியசம்பந்த சிவதர்மஉதாரராஜகுணங்களெல்லாம் தாங்களும் தங்கள் சகோதர துரைகளும் தங்களுக்கு நிறைகுணங்களாகப்பெற்று, தங்கள் செல்வத்திருமச்ந்தானவாசல் நீடூழிதழைத்து வரல்வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. அவ்விதம் ஸ்ரீஞானசம்பந்த பரமாசார்யஸ்வாமிகள் திவ்வியப் பிரஸாதம் இதனுள்வைத்துவருகிறது தாங்களும் சகோதரர்களும் குடும்பமும் தரித்து இன்பத்தினமர்ந்து இனிது வாழ்க. சுபம்.

ஸ்ரீஞானசம்பந்த ஸ்வாமிதுணை.

அம்பலவாணவல ஸ்வாமி
திருநெல்வேலி.

---

உ

சிவமயம்.

உருத்திரோத்காரிஹூ ஆடிமீ உ०உ

தேவகோட்டையிலிருந்து கொழும்பில் வந்திருக்கும் தங்கள்
மீ. சோ. சண்முகமுதலியார் எழுதிக்கொண்டது.

என்று முகம நியம்பாதவர்கண்ணும் சென்று பொருள் கொடுக்கும் தீதற்றோரும், தமையடைந்தாரைப் போற்றி வாழ்விக்கும் பெருங்கருணாகரக்கடலும், "நின்று மிருந்துங் கிடந்து முன்னை நினைப்பதல்லால்" என்பதற்கும் "எத்தொழிலைச்செய்தாலும் ஏதவத்தையுற்றாலும் முத்தர் மனம் மோனத்தே" என்பதற்கும் இலக்கியமாக் எப்பொழுதும் ஈசனையே மறவாது இல்லறம் இனிதே நடாத்தி [புத்திர பௌத்திராதிகளுடன்] இன்புற்று வாழ்ந்தோரும், தங்கள் குலத்துக்கும், சைவ சமயத்துக்குமே சிரோரத்தினம்போன்ற பெருஞ்செல்வாக்கடைந்தோரும்,

ப்திபுண்ணியத்தையே செய்யவேண்டுமென்று செய்துவந்து வழிகாட்டிய தீர்க்கதரிசி என்னும் தேவகோட்டைச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகராகிய பாண்டிதேச வள்ளல் ஸ்ரீமாந் சத்திரம் அருணாசலஞ்செட்டியாரவர்கள் மிகுந்த தவமுயற்சியால் பெற்றெடுத்த பெரும்பேறுடையாரும், சத்திரம் அருணாசலஞ்செட்டியாகிய தங்கள் அருந்தவப் பிதாவும், "செல்வமுயர்கின்ற, செல்வர்வாழ் சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்" என்பதை அகத்துக்கொண்டதற்கேற்பப் புறத்தும் தேவதேவோத்தமனாகிய தில்லையம்பலவாணனைத் தேவனுடோறுந் தெவிட்டாதேகித் தரிசித்தானந்தம் பெற்றோரும், ஸ்ரீ நீலகண்ட பாஷியத் தமிழ் மொழிபெயர்ப்புலவ ருக்கு வந்து உதவியோரும், இரட்டை ஜமீந்தாரும், புற்றிடங்கொண்ட பெரியோன் பேராலயமாகிய திருவாரூர்த் தியாகராஜர் தேவாலயத் திருப்பணிக்கதிபருமாகிய தேவகோட்டை சத்திரம் ஸ்ரீமாந், செல்வச்

சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள்

ஸ்ரீ காசிமுதற் கன்னியாகுமரி ஈருகவுடைய பலபேர்போன சிவஸ்தல க்ஷேத்திர யாத்திராமுடிவின்கண் ஸ்ரீ நெல்லையம்பதியின் நல்லவரான சிற்சபாநாயகராகிய ஸ்ரீமங் ஆனந்தநடராஜரின் அற்புத குஞ்சித சரணம் என்னும் அருள்நிறை இன்பக்கடலில் இனிது மூழ்கி இவ்வுலக வாழ்க்கையைத் துறத்தற்குரிய தம துயிர்நிலையுடலை யிழந்து பிரிந்த செய்தி செவி புகாமுன்னம் யானும் பெறுந்துயரம் அளவில!!

தாங்களும், சகோதரர்களும், சுற்றத்தினரும் தங்கள்குலமும், மிகுத்துரைக்கின் உத்தமோத்தம நெறியை யுடைய சைவ சமய உலகமுமே இப் பெற்றியோராகிய அருமறைகளாம் "பன்னிரு திருமுறைத் தமிழ்ப் பற்றுடையாரைப்" பிரிந்தமைக்கு வருந்தாதிருக்க இயலுமோ?

ஆயினும் "உட லெடுத்தோர் உடம்பிழத்தல் திண்ணமே" என்பதைப் பிரத்தியக்ஷத்திலும் கண்டறியும் அவ்வளவிலேயே சாந்திபெற்று அவர்களினும் மேலாகிய இஷ்டநற் போக போக்கியங்களுடனும், அஷ்ட ஐஸ்வரியங்களுடனும் தாங்களும், தங்கள் சகோதரர்கள் முதலானவர்களும் வம்ச பாரம் பரையாக வையகம் போற்றப்புகழுடன்நீடூழிவாழ்ந்து வரவேண்டுமாய் எல்லாம் வல்ல எண்குண முடைய இறைவராம் ஸ்ரீசிவகாமசுந்தரி யென்னும் பேரருட்சத்தியோடியைந்த அருமறைச் சிரத்தின் மிக்க அற்புதக்கோலத் திருவருளேயாகிய நமது ஸ்ரீமங் ஆநந்தநடராஜ ராஜராஜேஸ்வரப் பிரபுவை—வேண்டுவோர் வேண்டுவதையே யீயும் வள்ளல் [illegible] திரி கரணங்களாலும் போற்றிப் பிரார்த்தித்து வேண்டுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

---